# சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## மானியக் கோரிக்கை எண். 53

**2017-2018**


**எஸ். பி. வேலுமணி**

நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி
மற்றும்
சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2017

# பொருளடக்க அட்டவணை


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1–3 |
| 2. | துறையின் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகள் | 3–7 |
| 3. | கண்காணிப்பு | 7–23 |
| 4. | சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் திட்டங்கள் | 23–37 |
| 5. | முடிவுரை | 38–40 |
| 6. | இணைப்பு | I-VI |

# சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2017-18

## 1. முன்னுரை:

சமூகத்தில் உள்ள பல்வேறு பிரிவினர், குறிப்பாக பின்தங்கிய, நலிவுற்ற பிரிவில் உள்ள ஏழை மக்கள் மற்றும் மகளிரின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் விதமாக தமிழக அரசு ஏராளமான சமூகத் திட்டங்கள் மற்றும் பல்வேறு அறிவிப்புகளை அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

இதனைக் கருத்திற்கொண்டு, ஏழைகளுக்கு கறவைப்பசு வழங்குதல், வறியவர்களுக்கு விலையில்லா வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகள் வழங்குதல், திருமண உதவித் தொகையுடன் கூடிய திருமாங்கல்யத்திற்கு 22 காரட்டில் 8 கிராம்

விலையில்லா தங்க நாணயம் வழங்குதல் மற்றும் மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அரசால் அறிவிக்கப்பட்ட பல்வேறு அறிவிப்புகள் நிறைவேற்றப்படுவதை கண்காணிப்பதற்காகவும் பல்வேறு சிறப்புத் திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணிப்பதற்காகவும், தமிழக அரசால் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, மே திங்கள் 2011 இல் உருவாக்கப்பட்டது.

வேளாண்மை, எரிசக்தி, கல்வி, நல்வாழ்வு, ஊரக வளர்ச்சி, தொழில் மற்றும் உள்கட்டமைப்பு போன்ற முக்கிய பிரிவுகளில் நிலையான மற்றும் சரிசமமான வளர்ச்சியை எய்திட தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு

திட்டங்களின் செயலாக்கத்தை இத்துறை கண்காணித்து வருகிறது.

அரசின் அனைத்து துறைகளாலும் செயல்படுத்தப்படும் பல்வேறு சிறப்புத் திட்டங்களின் செயலாக்கத்தை சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து, கண்காணித்து, திட்டங்களின் பயன்கள் ஏழைமக்களுக்குச் சென்றடைவதை இத்துறை உறுதி செய்கின்றது.

## 2. துறையின் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகள்:

**2.1** சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையிடம் பின்வரும் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன:-

- ❖ அரசால் அறிவிக்கப்பட்ட பல்வேறு அறிவிப்புகளின் செயலாக்கம் குறித்த முன்னேற்றத்தினைக் கண்காணித்தல்.

- ❖ அரசின் சிறப்புத் திட்டங்களின் செயல்பாடுகளைத் தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து கண்காணித்தல்.

- ❖ கள ஆய்வுகள் மேற்கொள்ளுதல், மண்டல மற்றும் மாவட்ட அளவில் திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டங்கள் நடத்துதல் மற்றும் திட்டச் செயலாக்கத்தில் இடர்ப்பாடுகள் ஏதேனும் இருப்பின் அவற்றை களைவதற்குரிய நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்.

- ❖ செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் தரம் மற்றும் அளவீடு போன்ற அம்சங்கள் குறித்து அரசுக்குத் தேவையான குறிப்புகள் வழங்குதல் மற்றும் உரிய நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்.

- ❖ மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்களின் அறிக்கைகளைத் (கள ஆய்வு மற்றும் ஆய்வறிக்கைகளின் அடிப்படையில்) தொகுத்தும் கொள்கை அளவில் மாற்றங்கள் தேவைப்படும் இனங்கள் குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கு தலைமைச் செயலாளர் வழியாக அறிக்கை சமர்ப்பித்தல்.

- ❖ வழங்கப்படும் சேவைகளின் தரத்தினை உயர்த்துவதற்கு ஏதுவாக தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் வழிகாட்டி நெறிமுறைகளில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கும் மேம்படுத்துவதற்கும் பரிந்துரைத்தல்.

- ❖ தொழில்நுட்ப மாற்றங்களைக் கருத்திற்கொண்டு, கூர்ந்தாய்வு மூலம் திட்டங்களை மறுசீரமைத்தல் மற்றும் திட்ட நடைமுறைகளை மேலும் எளிமைப்படுத்துவதற்கும், அரசு நிறுவனங்களுக்கும் பொது மக்களுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதற்கான வழிவகைகளைச் செய்தல்.
- ❖ அரசுக்குத் தேவையான சிறப்பு அறிக்கைகளைத் தயாரித்து அளித்தல்.

**2.2** அரசின் திட்டங்கள் சிறப்பாக நிறைவேற்றபடுவதைப் உறுதி செய்யும் விதமாக ஆய்வு மற்றும் கண்காணிப்பு அமைப்பினை பிரத்தியேகமாக தலைமைச் செயலகத்தில் தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது. அறிவிப்புகள் நிறைவேற்றப்படுதல் மற்றும் சிறப்புத் திட்டங்களின்

செயலாக்கம் ஆகியவற்றை அரசுத் துறைச் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் மாவட்ட அளவில் காலமுறை ஆய்வு மற்றும் மேற்பார்வை செய்வதன் மூலம் கண்காணிப்புப் பணி மேற்கொள்ளப்படுகின்றது.

## 3. கண்காணிப்பு:

திட்டங்களின் பயன்கள் பயனாளிகளுக்கு குறித்த காலத்தில் சென்றடைவதை உறுதி செய்வதற்கு கண்காணிப்பு முறை தவிர்க்க முடியாததாகும். அரசின் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மற்றும் அறிவிப்புகள் நிறைவேற்றப்படுவதைச் சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை கண்காணிக்கின்றது.

## 3.1 கண்காணிப்பு முறைகள்:

அரசின் சிறப்புத் திட்டங்களின் செயலாக்க நிலை தொடர்பான விவரங்களை தொடர்ச்சியாக பதிவு செய்வதற்கு கண்காணிப்பு எனும் நிர்வாக

முறை சிறந்த பங்களிப்பாற்றி வருகின்றது. கண்காணிப்பு மூலம் பல்வேறு திட்டங்களின் செயல் மற்றும் நிதி ஆகியவற்றின் முன்னேற்ற நிலைகள் குறித்த விவரங்களைக் கால இடைவெளிகளில் அரசுக்கு இத்துறை அளித்து வருகின்றது. திட்டங்களின் பயன்கள், பயனாளிகளுக்குச் சென்றடைவதை சீர்படுத்துவதற்கும் மேலும் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கும் கண்காணிப்பு தேவைப்படுகின்றது.

திட்டங்கள் திறமையாக செயல்படுத்தப் படுவதற்கு தேவையான விவரங்களை கண்காணிப்பு அளிக்கின்றது. திட்ட பயன்கள் இலக்கு மக்களைச் சென்றடைகின்றனவா என்பதை உறுதி செய்வதற்கும், கள அளவில் திட்டங்களின் செயல்பாட்டில் இடர்ப்பாடுகள் ஏதேனும் இருப்பின் அவற்றை கண்டறிவதற்கும் தேவையான விவரங்களை அளிக்கின்றது. மேலும், குறித்த கால

இடைவெளிகளில் பல்வேறு திட்டங்களின் முன்னேற்றம் குறித்த நிலையினை மதிப்பீடு செய்வதையும் கண்காணிப்பு உறுதி செய்கின்றது. திட்டங்கள் செயல்படுத்தப்படும்போதே, அவற்றின் முன்னேற்றம் குறித்த விவரங்களை முறையாக சேகரிக்கவும், பகுப்பாய்வு செய்வதற்கும் தொடர் கண்காணிப்பு வழிவகை செய்கின்றது.

சிறப்புத்திட்டச் செயலாக்கத் துறை, சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து பல்வேறு திட்டங்களின் தற்போதைய முன்னேற்ற நிலை குறித்த விவரங்களைச் சேகரித்து பதிவு செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. மேலும், அரசின் திட்டங்கள், திட்டமிட்டப்படி செயல்படுத்தப்படுகின்றனவா என்பதையும், திட்டச் செயலாக்கத்தில் உள்ள இடர்ப்பாடுகளைக் கண்டறிந்து செயலாக்கத்தினை மேம்படுத்துவதற்கும் கண்காணிப்பு வழிவகை செய்கின்றது. பல்வேறு

துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் நிலையினை உன்னிப்பாக கண்காணிப்பதுடன், குறிப்பாக அரசின் சிறப்புத் திட்டங்களின் மீது தனிக் கவனம் செலுத்தி, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை கண்காணிக்கின்றது.

## 3.2 அரசின் சிறப்புத் திட்டங்களைக் கண்காணித்தல்:

சமூகப் பொருளாதார வளர்ச்சிக்காகவும், மக்களின் நீண்டநாள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.அரசுத்துறைகளின் பல்வேறு அறிவிப்புகளின் செயலாக்கத்தின் நிலை குறித்த தகவல்களை உரியத் தகவல் தொழில்நுட்பங்களைக் கொண்டு பதிவு செய்வதற்கு ஏதுவாக உடன்நிகழ் (on-line) முறையினை இத்துறை உருவாக்கி உள்ளது.

## 3.3 செயல்திறன்மிக்க கண்காணிப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட நுட்பங்கள்:

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, திறமையான கண்காணிப்பினை உறுதி செய்வதற்கு பின்வரும் நுட்பங்களை ஏற்படுத்தியுள்ளது.

### (அ) அறிவிப்புகளைக் கண்காணித்தல்:

சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பெறும் மாண்புமிகு ஆளுநர் உரையில் உள்ள அறிவிப்புகள், நிதிநிலை அறிக்கையில் உள்ள அறிவிப்புகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் அறிவிக்கப்படும் அறிவிப்புகள், மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டில் அறிவிக்கப்படும் அறிவிப்புகள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்படும் அறிவிப்புகள் ஆகியவற்றின்

முன்னேற்றங்களைக் கண்காணிக்கும் பொறுப்பு இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு அறிவிப்புகளின் செயலாக்க நிலை குறித்த முன்னேற்ற விவரங்கள் தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து இத்துறையால் சேகரிக்கப்படுகின்றன. மேலும், தலைமைச் செயலாளர் தலைமையில் நடத்தப்படும் “அனைத்து துறை செயலாளர்கள்” ஆய்வு கூட்டத்திற்கு தேவையான விவரங்களை இத்துறை வழங்குகிறது. இரண்டு வாரத்திற்கு ஒருமுறை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கு முன்னேற்ற அறிக்கையினை இத்துறை சமர்ப்பிக்கிறது. அறிவிப்புகளின் தற்போதைய முன்னேற்ற விவரங்களை சம்பந்தப்பட்ட துறையினர் உடனுக்குடன் இத்துறைக்கு வழங்கிட ஏதுவாக இணையவலைப் பக்கங்கள் இத்துறையால் ஏற்படுத்தப்பட்டு, தலைமைச் செயலக

உள்வளையதளத்தில் நிறுவப்பட்டுள்ளது. மேலும், பலவிதமான அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு ஏதுவாக பிரத்தியேக உள்உறைவிட (in-house) மென்பொருள் ஒன்று வடிவமைக்கப்பட்டு இத்துறையால் உருவாக்கப்பட்டுள்ளது. அரசுத் துறைகள் தங்களின் துறைத் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து திட்டங்கள் தொடர்பான நிலையினை உடன் நிகழ்வு முறையில் வலைப்பக்கத்தில் பதிவு செய்வதற்கு ஒருங்கிணைப்பு அலுவலர்களை நியமித்துள்ளது.

பல்வேறு துறைகளிடமிருந்து பெறப்பட்ட முன்னேற்ற அறிக்கைகள் தொகுக்கப்பட்டு, அறிவிப்புகளின் முன்னேற்ற நிலைகள் வகைப்படுத்தப்பட்டு, தொகுப்பு அறிக்கைகள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் இத்துறையால் அரசுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. இவ்வாறு

தொகுக்கப்பட்ட அறிக்கைகள், அரசின் உயர்நிலை ஆய்வுக் கூட்டங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் மேற்கொள்ளப்படும் கண்காணிப்புப் பணியானது திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டினை அதிகப்படுத்தவும் / திட்டங்களை விரிவுபடுத்தவும் / புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும் / நடைமுறையில் உள்ள திட்டங்களில் மாற்றங்களைச் செய்வதற்கும் தேவைப்படும் உள்ளீடுகளை வழங்குகின்றது.

## (ஆ) அரசின் முதன்மைத் திட்டங்களைக் கண்காணித்தல்:

கிராமப்புற ஏழை மக்களின் வருமானத்தை அதிகரிக்கவும், அதன் வாயிலாக அவர்களின் குடும்பத்தினரின் வாழ்வாதாரத்திற்கு வழிவகை செய்திடவும் கறவைப்பசு, வெள்ளாடு/செம்மறி

ஆடுகள் வழங்குதல், தகவல் தொழில்நுட்ப இடைவெளியைக் குறைப்பதற்காக மாணாக்கர்களுக்கு மடிக்கணினி வழங்குதல், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மகளிருக்கு மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் போன்ற வீட்டு உபயோகப் பொருட்கள் வழங்குதல், ஏழைகளின் நல்வாழ்வினைப் பாதுகாத்திட விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், கருவுற்ற பெண்களுக்கு டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், ஏழை மற்றும் நலிவடைந்த மகளிருக்கு பல்வேறு திருமண உதவித் திட்டங்களின் கீழ் நிதியுதவியுடன் கூடிய திருமாங்கல்யத்திற்கு 22 காரட்டில் 8 கிராம் தங்க நாணயம் வழங்குதல் மற்றும் முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் போன்ற முதன்மைத் திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்படுகின்றன. பல்வேறு துறைகளால்

செயல்படுத்தப்படுகின்ற இத்திட்டங்களை, கூர்ந்து கண்காணிக்கும் பணி சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்த அறிக்கைகளை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து இத்துறை சேகரிக்கின்றது. அவ்வறிக்கைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் தொகுப்பு அறிக்கைகள் அரசின் ஆய்வுக் கூட்டங்களுக்கு அடிப்படை விவரங்களாக அமைகின்றன.

**(இ) உயர்நிலை கண்காணிப்புக் குழு:**

அரசின் சிறப்புத் திட்டங்களை ஆய்வு செய்வதற்காகவும் கண்காணிப்பதற்காகவும் உயர்நிலை கண்காணிப்புக் குழு ஒன்று அரசால் பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது:—

| வ. எண் | அலுவலரின் பதவி | நிலை |
|---|---|---|
| 1 | அரசு தலைமைச் செயலாளர் | தலைவர் |
| 2 | அரசு முதன்மைச் செயலாளர், நிதித்துறை | உறுப்பினர் |
| 3 | அரசு முதன்மைச் செயலாளர், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை | உறுப்பினர் – செயலர் |
| 4 | தொடர்புடைய துறைகளின் அரசு முதன்மைச் செயலாளர்கள்/ செயலாளர்கள் | உறுப்பினர்கள் |

உயர்நிலை கண்காணிப்புக் குழுக் கூட்டங்களில் அரசின் சிறப்புத் திட்டங்களின் செயலாக்கம் குறித்த விவரங்கள் விவாதிக்கப்படுவதுடன், செயலாக்கத்தில் இடர்ப்பாடுகள் ஏதேனும் இருப்பின் அதற்கான தீர்வுகள் குறித்தும் முடிவு செய்யப்படுகின்றது. தேவைப்படும்போது கூட்டப்படும் உயர்நிலைக் கண்காணிப்புக் குழுக்கூட்டங்களில் சிறப்புத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்படுவதுடன் அதன் தற்போதைய நிலை,

செயல்படுத்துவதில் உள்ள சவால்கள் மற்றும் இடர்ப்பாடுகள் ஏதேனும் இருப்பின் அவைகுறித்தும் விரிவாக விவாதிக்கப்படுகின்றன.

இக்கூட்டத்தில் நடைபெறும் விவாதங்களின் அடிப்படையிலும், மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்களின் அறிக்கைகளின் அடிப்படையிலும், துறைகளின் பின்புல அறிக்கைகளின் அடிப்படையிலும், அலுவலர்களின் கருத்துக்களின் அடிப்படையிலும் கொள்கை அளவிலான மாற்றங்கள் மற்றும் சிறப்புத் திட்டங்களின் வழிகாட்டு நெறிமுறைகள் புதுப்பிக்கப்படுகின்றன.

**(ஈ) மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள்:**

மாவட்ட அளவில் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்களின் செயல்பாட்டினைக் கண்காணிப்பதற்கென மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட

இயக்குநர் போன்ற உயர் அலுவலர்கள் ஒருங்கிணைப்பு அலுவலர்களாக மாவட்ட ஆட்சியர்களால் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒருங்கிணைப்பு அலுவலர்கள், திட்டங்களைச் செயல்படுத்தும் துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றுவதுடன், திட்டங்கள் குறித்த தகவல்களைப் பெற்றிடவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாவட்ட அளவில் ஒருங்கிணைப்பு அலுவலர்களாகச் செயல்பட்டு வருகின்றனர். சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொள்ளும்போது மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள் தேவையான உதவிகளை வழங்குகின்றனர்.

**(உ) கள ஆய்வுகள்:**

மாவட்ட அளவில் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களின்

முன்னேற்றம் மற்றும் செயல்திறன்கள் குறித்து இத்துறையின் அலுவலர்கள் களஆய்வு மேற்கொண்டு அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கின்றனர்.

**(ஊ) மண்டல ஆய்வுக் கூட்டங்கள்:**

அரசின் சிறப்புத் திட்டங்கள் மற்றும் குறிப்பிட்ட திட்டங்களின் செயலாக்கம் குறித்த ஆய்வுக் கூட்டங்கள், மண்டல அளவில் மாவட்ட ஆட்சியர்களுடன் நடத்தப்படுகின்றன. இதுபோன்ற மண்டல ஆய்வுக்கூட்டங்களில் தொடர்புடைய துறைகளின் உயர் அலுவலர்கள், திட்டசெயலாக்க நடைமுறைகள் குறித்த விரிவான கலந்துரையாடல்களில் கலந்துகொண்டு பயன்பெறுகின்றனர். வழங்கப்படும் சேவையின் தரத்தினை உயர்த்தும்பொருட்டு நடத்தப்பெறும் இத்தகைய ஆய்வுக்கூட்டங்கள், கள அளவிலான இடர்ப்பாடுகள்/ திட்டங்களில் மாறுதல்கள் /

முன்னேற்றங்கள் ஆகியன குறித்து மாவட்ட அலுவலர்கள் எடுத்துரைப்பதற்கு வழிவகை செய்கின்றன.

## 3.4. கண்காணிப்பு அலுவலர்கள்:

அரசுச் செயலாளர்கள்/ முதன்மைச் செயலாளர்கள்/ கூடுதல் தலைமைச் செயலாளர்களை மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களாக அரசு நியமித்துள்ளது. மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள், அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட மாவட்டங்களில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி, முக்கிய திட்டங்களைக் கள ஆய்வு மேற்கொண்டு, திட்டங்களை விரைவாக செயல்படுத்துவதில் இடர்ப்பாடுகள் ஏதேனுமிருப்பின் தக்க ஆலோசனைகளையும், தீர்வுகளையும் மாவட்ட அலுவலர்களுக்கு வழங்குகின்றனர்.

மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள், துறைகளுக்கிடையேயான இடர்ப்பாடுகளைக்

களைவதற்கு ஏதுவாக துறைத் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதோடு, நடைமுறையில் உள்ள பல்வேறு திட்டங்களின் வழிகாட்டு நெறிமுறைகளின் சிறப்புத் தன்மைகளை மதிப்பிடுதல் மற்றும் அரசளவில் மேற்கொள்ளப்படவேண்டிய கொள்கை மாற்றங்கள் குறித்தும் பரிந்துரைகளை அளிக்கின்றனர். பொதுமக்களின் பெருகிவரும் எதிர்பார்ப்புகள் மற்றும் களஅளவிலான தேவைகளை நிறைவு செய்யும் வகையில் கொள்கைகளைத் தொடர்ந்து செம்மைப்படுத்திட நடைமுறையில் உள்ள ஏற்பாடுகள் வழிவகை செய்கின்றன. மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் தங்களின் ஆய்வுக் குறிப்புகள், திட்டங்களின் மேம்பாடு குறித்து எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள், திட்டத்தின் மேம்பாடு மற்றும் மாறுதல்கள் குறித்த பரிந்துரைகள் ஆகியவற்றை அரசுக்கு அளிக்கின்றனர். கண்காணிப்பு

அலுவலர்களின் பரிந்துரைகள் தொகுக்கப்பட்டு, தலைமைச் செயலாளர் வழியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

## 4. சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் திட்டங்கள்:

அரசின் பல்வேறு சிறப்புத் திட்டங்களைக் கண்காணிப்பதுடன், பின்வரும் இரண்டு முதன்மைத் திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பு சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையைச் சார்ந்ததாகும்.

1. மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல்.

2. மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்குதல்.

## 4.1 மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல்:

இந்திய மாநிலங்களிலேயே மென்பொருள் ஏற்றுமதியில் தமிழகம் முன்னணி மாநிலமாகத் திகழ்வதுடன், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த முதலீட்டில் உலகளவில் விரும்பப்படும் மாநிலமாகவும் திகழ்ந்து வருகின்றது. ஹார்வார்டு பல்கலைக் கழகத்தின் பன்னாட்டு வளர்ச்சி மையம், கணினிக் கல்வியை ஊக்குவிப்பதிலும் கணினி சார்ந்த அரசு சேவைகளை வழங்குவதிலும் தனியார் துறைக்கு ஊக்கமளிப்பதிலும் தமிழகம் முக்கிய பங்கு வகிக்கின்றது எனக் குறிப்பிட்டுள்ளது, தகவல்தொழில்நுட்பத் துறையில் தமிழகத்தின் வளர்ச்சிக்குச் சான்றாகும். இந்த தொழில்நுட்ப சகாப்தத்தில், உலகம் ஒரேபெருங்கிராமமாக உருவானதுடன் கணினிக் கல்வியறிவு உலக வேலைவாய்ப்புச் சந்தையில் பல்வேறு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது. மேலும்,

தகவல் தொடர்பு தொழில்நுட்பமானது எதிர்வரும் உலக சமூகப் பொருளாதார மாற்றத்திற்கான நுழைவாயிலாக அமைகிறது. இருப்பினும், ஊரக மற்றும் நகர்ப்புறங்களில், ஏழை மற்றும் வசதிபடைத்தோருக்கிடையே மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப இடைவெளி உள்ளது.

இத்தகைய தகவல் தொழில்நுட்ப இடைவெளியை உணர்ந்து அதனை இணைக்கும் முயற்சியாக தமிழக அரசு, தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்ப கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு மடிக்கணினி வழங்கும் முன்னோடித் திட்டத்தினை 2011–12ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. கணினி அறிவைப் போதிக்கும் தனிச்சிறப்பு வாய்ந்த திட்டமான மாணாக்கர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கும் திட்டம், மாநிலம்

முழுவதிலும் உள்ள ஏழைக் குடும்பங்களில் உள்ள மாணக்கர்களுக்கு உயர்க் கல்வியை அடைய உதவும் உன்னத நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டு உயர்க்கல்வியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாணவர்கள், தொழில்நுட்பத்தின் சமீபத்திய நுட்பங்களை அறிந்து கணினி பயன்பாட்டில் வேலைவாய்ப்பு பெறுவதற்கு ஏதுவான தொழில்நுட்ப அறிவுத்திறன் பெற்று வேலைவாய்ப்புச் சந்தைகளில் வெற்றி பெற செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டம், மாநில அரசின் கல்விக் கொள்கையின் முக்கிய அம்சங்களான "அணுகுதல், பங்கேற்பு, வெற்றிபெறல்" ஆகியவற்றை அடைவதற்கு உறுதுணையாய் உள்ளது.

**2011–12** மற்றும் **2012–13** ஆம் ஆண்டுகளில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல்

கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயின்ற மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டன. **2013–14** ஆம் ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணவர்கள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பயிலும் மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் அடைகின்றனர்.

**ஆண்டுவாரியாக / கல்வி நிறுவனங்கள் வாரியாக மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் வழங்குதல்**

| ஆண்டு | பள்ளிகள் | கலை/ அறிவியல் கல்லூரிகள் | பொறியியல் கல்லூரிகள் | பல்தொழில் நுட்பக் கல்லூரிகள் |
|---|---|---|---|---|
| 2011–12 | 12–ஆம் வகுப்பு | முதல் மற்றும் மூன்றாம் ஆண்டு | இரண்டாம் மற்றும் நான்காம் ஆண்டு | முதல் மற்றும் மூன்றாம் ஆண்டு |
| 2012–13 | 12–ஆம் வகுப்பு | மூன்றாம் ஆண்டு | இரண்டாம் மற்றும் நான்காம் ஆண்டு | முதல் மற்றும் மூன்றாம் ஆண்டு |
| 2013–14 முதல் | 12–ஆம் வகுப்பு | – | – | முதலாம் ஆண்டு |

அரசின் சிறப்புத் திட்டங்கள் சிறப்பாக செயல்படுவதைக் கண்காணித்திட சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை 2011 ஆம் ஆண்டு அரசால் பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டது. இத்துடன், மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப வல்லுநர்கள் இத்துறையில் இல்லாத காரணத்தினால், மடிக்கணினி கொள்முதல் செய்வதற்கு ''கொள்முதல் முகமையாக'' தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) செயல்படும் வகையில் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை எல்காட் வசம் கொள்முதல் பணியினை ஒப்படைத்தது. இத்திட்டத்தின் கீழ் மடிக்கணினிகளைக் கொள்முதல் செய்வதற்கான நிர்வாக ஒப்புதல் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் வழங்கப்படுகிறது. இதற்குத்

தேவையான நிதி எல்காட் நிறுவனத்திற்குச் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் விடுவிக்கப்பட்டு வருகிறது.

பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககங்கள் மூலமாக **2011–12** மற்றும் **2012–13** ஆகிய ஆண்டுகளில் மடிக்கணினிகள் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. **2013–14** ஆம் ஆண்டு முதல் மடிக்கணினிகள் பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மடிக்கணினிகள் “Windows 10 pro” தேசிய கல்வி பதிப்பு மற்றும் மேம்பட்ட கணினி பயன்பாடு வளர்ச்சி மையத்தின் BOSS / LINUX ஆகிய இரட்டை தொடக்க வசதி உடையதாகவும், வைரஸ் எதிர்ப்பு

மென்பொருளுடனும், தமிழ் இணைய தொடக்கக் கல்விக் கழகம் மற்றும் கல்வித் துறைகளின் பாடத்திட்டங்களை உள்ளடக்கியும், ஆங்கிலம் மற்றும் தமிழ் எழுத்துக்களுடன் நாணயக் குறியீட்டுடன் கூடிய ஒருங்கிணைந்த தொடு தளம் (Touch Pad) அடங்கிய தரமான விசைப்பலகையும் வழங்கப்படுகிறது. பார்வைத் திறன் குறைபாடுள்ள மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் மடிக்கணினிகளில் அவர்கள் பயன்படுத்தும் வகையில் சிறப்பு மென்பொருள் நிறுவப்பட்டுள்ளது. மேலும், மடிக்கணினியின் பாதுகாப்பிற்காக தோள் பையுடன் (Back Pack) கூடிய மடிக்கணினி வழங்கப்படுகிறது. மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் வாயிலாக, பரவுத்தாள் (Spread Sheet), விளக்கக் காட்சி (Power Point Presentation) மற்றும் சொற்செயலி (Word Processing) ஆகிய

தொழில்நுட்ப அறிவுத் திறன்களை மாணாக்கர்கள் ஆர்வமுடனும் விரைவாகவும் கற்க இயலுகிறது.

மடிக்கணினிகள் மற்றும் அதனில் உள்ள மின்கலன்களுக்கும் ஓராண்டு உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது. மடிக்கணினிகள் நன்கு செயல்படுவதற்கான தொடர் பராமரிப்பினை உறுதி செய்யும் பொருட்டு அனைத்து மாவட்டங்களிலும் சேவை மையங்களை தொடர்புடைய நிறுவனங்கள் அமைத்துள்ளன. இச்சேவை மையங்கள் மூலம் பராமரிப்பு மேற்கொள்ளுதல் குறித்து மாணவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டமானது, தற்போதைய தலைமுறை மாணாக்கர்களுக்கு முழு அறிவுசார் வாய்ப்புகளுக்கு வழிவகை ஏற்படுத்தியுள்ளது. மாணவர்கள் வேலை தேடத் துவங்கும் காலத்திலேயே, நவீன தொழில்நுட்பங்களை அறிந்து பயனடையும்

வாய்ப்பினை இத்திட்டத்தின் வாயிலாக அரசு வழங்குகிறது.

மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் ஒரு வெற்றிகரமான திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் பயனடைந்த மாணவர்கள் கணினியின் பல்வேறு பயன்பாடுகளைக் கண்டறிந்து அதனை உபயோகித்துக்கொள்ள முடிகிறது. மேலும், குடும்பத்தில் உள்ள பிற உறுப்பினர்கள், குறிப்பாக இளம் தலைமுறையினர் கணினி குறித்த தொழில்நுட்பத்தை அறிந்துகொள்வதற்கும், இயக்குவதற்கும் மிகுந்த ஈடுபாடு காட்டுகின்றனர் என்பதும் தெரிய வருகிறது. இந்த வளர்ச்சியானது எதிர்காலத் தலைமுறையினர் கணினி தொழில்நுட்ப கல்வியறிவிற்கு தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவும், கணினி தொழில்நுட்ப உலகின் அபரிமிதமான வாய்ப்புகள் வாயிலாக உலக அளவில் சிறந்து விளங்கவும் வழிவகை செய்துள்ளது.

குடும்பத்தின் இளம் தலைமுறையினர் இதன்மீது கொண்டுள்ள ஆர்வம், சமூகத்தில் நிகழவிருக்கும் ஒரு மாற்றத்தின் அறிகுறியினை வெளிக்கொணர்கிறது. மொத்தத்தில், மாணவர்கள் மடிக்கணினியை ஒரு கருவியாக மட்டும் பார்க்காமல், ஏற்றமிகு எதிர்காலத்திற்கான சாளரமாகவும், சமூக நிலையில் உயர்ந்து விளங்க ஓர் ஏணியாகவும் கருதுகின்றனர்.

இந்த திட்டம், மாணாக்கர்களின் திறன் மதிப்பை கூடுதலாக்குவதோடு, அவர்களின் படைப்புத் திறனை தூண்டுவதற்கு ஒரு தூண்டுகோலாய்த் திகழ்கிறது. மேலும், காலப்போக்கில் இத்திட்டத்தின் மூலம் ஏற்படும் மாற்றமானது, மாணவர் சமுதாயத்தின் நிறைவான வெற்றியின் அடையாளமாகத் திகழும்.

தமிழக அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பல்வேறு புதுமையான திட்டங்கள் பிறமாநிலங்களால் பின்பற்றப்படுவதைப்போலவே இத்திட்டமும் பின்பற்றப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், **2011–12** ஆம் ஆண்டு முதல் **2015–16** ஆம் ஆண்டு வரை ரூ.**4,842.30** கோடி மதிப்பில் **31.78** இலட்சம் மடிக்கணினிகள் விலையேதுமின்றி மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. **2016–17** ஆம் ஆண்டிற்கு **5.35** இலட்சம் மடிக்கணினிகள் மாணாக்கர்களுக்கு வழங்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, ரூ.**867.00** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

மாணாக்கர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம், நடப்பாண்டு **2017–18**–லும் தொடர்ந்து

செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கென ரூ.758.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மற்றும் இதன்மூலம் உத்தேசமாக 5.65 இலட்சம் மாணாக்கர்கள் பயன்பெற உள்ளனர்.

## 4.2 மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம்:

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை மூலம் மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் நோக்கமானது, மகளிருக்கு சிரமமான வீட்டு வேலைகளிலிருந்து நிவாரணம் அளிப்பதாகும். ஏறத்தாழ 1.75 கோடி குடும்பங்களில் உள்ள மகளிருக்கு இச்சாதனங்கள் ரூ. 7,622.00 கோடி செலவில் 2011–12 ஆம் ஆண்டு முதல் 2015–16 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டன. இச்சாதனங்கள்

அவர்களின் இல்லங்களை அலங்கரித்ததன் மூலம், ஏழை மகளிரின் வாழ்க்கைத் தரம் பெருமளவில் மேம்பட்டதுடன், அவர்களின் சமுதாய நிலையையும் உயர்த்தியுள்ளது. இத்திட்டம் மகளிர், தங்களை பிற பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுத்திக் கொள்ள வாய்ப்பு அளிப்பதன் மூலம் பொருளாதாரத்தில் தங்களின் பங்களிப்பினை உயர்த்திடவும் அங்கீகாரம் அளிக்கின்றது.

## 4.3 நிறுவன வளத் திட்டமிடல் (Enterprise Resource Planning - ERP)

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் செயல்படுத்தப்படும் மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மடிக்கணினிகள், மாணவர்களுக்குச் சென்றடைவதைக் கண்காணிக்க, நிறுவன வளத் திட்டமிடல் குறித்த ஒரு உயரிய மென்பொருள்

உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மேலாண்மை மென்பொருள், நிறுவனத்தின் அனைத்து பணிகளையும் ஒருங்கே நிர்வகிக்க உதவுகின்றது. இந்த நிறுவன வளத் திட்டமிடல் மென்பொருள், பொருட்கள் வாங்குதல், வழங்குதல் மற்றும் விநியோகித்தல் போன்ற அனைத்து அம்சங்களையும் ஒருங்கே உள்ளடக்கிய ஒரு மென்பொருளாகும். மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தைக் கண்காணிப்பதற்காக இந்த மென்பொருள் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் (எல்காட்) உருவாக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்வித் துறை, உயர்கல்வித் துறை மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) மூலம் மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தினைக் கண்காணிப்பதற்கு இம்மென்பொருள் பயன்படுத்தப்படுகின்றது.

## 5. முடிவுரை:

தமிழக அரசால் செயல்படுத்தப்படும் இந்நலத்திட்டங்கள், சமூகப் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மாற்றி தமிழகத்தை முன்னோடி மாநிலமாக நிலை நிறுத்துகின்றது. ஆரோக்கியமான தாய்மார்கள், ஆரோக்கியமான மகவை பெற்றிடுவதை உறுதி செய்தல், மாணாக்கர்களின் திறன் மற்றும் வேலைவாய்ப்பினை அதிகப்படுத்துதல், ஏழை எளியோருக்கான வாழ்வாதாரங்களை மேம்படுத்தி அவர்களின் வருமானத்தைப் பெருக்குதல், ஊரக ஏழை மக்களுக்கு சுற்றுச்சூழலுக்குத் தகுந்த வீடுகள் வழங்குதல், சமுதாயத்தில் கைம்பெண்கள் மற்றும் நலிவடைந்தோருக்கு உதவுதல் மற்றும் தேவையுள்ள

அனைவருக்கும் மருத்துவக் காப்பீடு வழங்குதல் போன்ற நலத்திட்டங்களின் மூலம் நற்பயன்களை தமிழகமக்கள் அடைந்து வருகின்றனர்.

அரசின் பல்வேறு சிறப்புத் திட்டங்கள், அறிவிப்புகள், தேர்தல் வாக்குறுதிகள் ஆகியவற்றை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை ஒரு பிரத்தியேகமான மென்பொருள் மூலம் கண்காணிக்கின்றது. சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை திட்ட வழிகாட்டி நெறிமுறைகளில் மாற்றம் செய்வதற்குத் தேவையான விவரங்களை அளிப்பதன் மூலம் திட்டங்களின் பயன்கள் மக்களைச் சென்றடைவதை உறுதி செய்கின்றது.

பல்வேறு தரப்பு மக்களின் நன்மைக்காகவும், செழிப்பான வாழ்விற்காகவும் தமிழக அரசு அறிவித்த


புதுமையான சிறப்புத் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்திட சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை சிறந்த முறையில் திட்டங்களின் செயல்பாடுகளைக் கண்காணித்து வருகின்றது. சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் கண்காணிப்புப் பணியானது இம்மாநிலத்தின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் ஓர் முக்கிய பங்கு வகிக்கின்றது.

**எஸ். பி. வேலுமணி**
**நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி**
**மற்றும்**
**சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர்**









திட்டம்
கண்காணிப்பு செயல்முறை – விளக்கப்படம்
விவரங்களை பகுப்பாய்தல்
அறிக்கைகள் தயாரித்தல்
உயர் மட்ட கண்காணிப்புக் குழு
விவரங்கள் சேகரித்தல்
விவரங்கள் செயலாக்கம் மற்றும் தொகுத்தல்
கள ஆய்வுகள்
கொள்கை இடையீடு
பரிந்துரைகள்
மேம்படுத்துதல் / மாற்றங்கள்

## மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்

**மாணவர்களின் எண்ணிக்கை (2011–12 முதல் 2015–16 வரை) – 31.78 இலட்சம்**



## மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்

### மாவட்ட வாரியாக மாணவர்களின் எண்ணிக்கை

### (2011-12 to 2015-16) - 31.78 இலட்சம்

